## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் இன்று ( 22.8.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: கழக ஆக்கப் பணிகள்**

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.



சிவகாசி மாநகரத்துக்கு வருகை தந்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களை சிவகாசி மாநகர தி.மு.க.வின் சார்பில் மாநகரச் செயலாளர் உதயசூரியன் வரவேற்றார். உடன் தி.க. மாவட்ட தலைவர் திருப்பதி, தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் பால்ராஜ், மாவட்ட பிரதிநிதி இராஜேஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 85 அடியை நெருங்கியது!

மேட்டூர்,ஆக.22-

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 11,317 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 11,366 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கனஅடி வீதம் திறந்து விடப்பட்டுள்ளது. திறக்கப்படும் நீரின் அளவை விட, வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 83.77 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 84.27 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 46.34 டிஎம்சியாக உள்ளது. கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கே.ஆர்.எஸ். அணைகளில் இருந்து சுமார் 14 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படும் நிலையில், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 12 ஆயிரம் கனஅடியாக தொடர்கிறது.

## உலகமே புதிய புதிய தீர்வுகளைத் தேடிக் கொண்டிருக்கிறது—

# பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகளை உருவாக்கி உலகை வெல்லுங்கள்!

## தூத்துக்குடியில் நடைபெற்ற 'தேசிய ஸ்டார்ட் அப் மாநாடு' – 2026–இல்

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**தூத்துக்குடி, ஆக.22-**

**உலகமே புதிய புதிய தீர்வுகளைத் தேடிக் கொண்டிருக்கிறது. பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகளை உருவாக்கி உலகை வெல்லுங்கள் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.**

**தூத்துக்குடியில் All India Chamber of Commerce and Industries சார்பில் நடைபெறும் National Startup Summit 2026 மாநாட்டின் துவக்கவிழாவில் கலந்துகொண்டு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி ஆற்றிய உரை வருமாறு:**







தேசிய ஸ்டார்ட் அப் மாநாடு 2026 வந்திருக்கக்கூடிய அத்தனை இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள். இன்றைய தொழில்நுட்பம் எங்களை போன்றவர்களுக்கு புரியாத ஒன்று, அனால் உங்களுக்கு புரியும். ஏஐ (AI) போன்ற தொழில்நுட்பம் பல விஷயங்களை இன்றைக்கு மாற்றியமைக்க திறன் உள்ள காலகட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

தொழில்நுட்ப நிறுவனங்கள் முக்கியம் என்று நினைத்த காலக்கட்டம் சென்று, ஏஐ(AI) அந்நிறுவனங்களில் வேலை பார்க்கக்கூடியவர்களை மிக எளிதில் அவர்களை மாற்றக்கூடிய சூழல் உள்ளது. இதனால் எத்தனை பேருக்கு வேலை இருக்கும், அவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற பல கேள்விகள் தோன்றுகிறது, பல நாடுகள் இந்த இக்கட்டான சூழ்நிலையை எவ்வாறு கையாள்வது என்று நினைக்கக்கூடிய காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நம்மைச் சுற்றி நிறைய விஷயங்கள் இருக்கின்றன. சில விஷயங்களை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம்; சிலவற்றை விளையாட்டாகப் பேசிக்கொள்கிறோம். உதாரணமாக, இங்கே விளக்கேற்றும் போது, எந்தச் சூழலிலும் எளிதாக ஏற்றக்கூடிய ஒரு விளக்கையோ, ஒரு திரியையோ யாராவது கண்டுபிடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கலாம். பல நேரங்களில், விளக்கேற்றுவது மகிழ்ச்சியைத் தரும் ஒரு விஷயமாக இருந்தாலும், அதைச் செய்வதே சில சூழ்நிலைகளில் ஒரு சவாலாக மாறிவிடுகிறது.

**இன்று உலகமே புதிய தீர்வுகளை தேடிக்கொண்டிருக்கிறது!**

இது ஒரு சிறிய விஷயம்தான். ஆனால், இது போன்ற நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் எண்ணற்ற சிறிய சவால்கள் இருக்கின்றன. அவற்றைத் தீர்க்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. இன்று உலகமே புதிய புதிய தீர்வுகளைத் தேடிக்கொண்டிருக்கிறது.

அந்தத் தீர்வுகளை உருவாக்கப் போகிறவர்கள் நீங்கள்தான்.இன்றைக்கு தீர்வுகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர்களாகவும், நாளைக்கு உலகத்தின் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை உருவாக்கப் போகிறவர்களாகவும் நீங்கள் இருக்கிறீர்கள்.ஸ்டார்ட்அப் என்பது வெறும் ஒரு நிறுவனத்தைத் தொடங்குவது அல்ல.மக்கள் சந்திக்கும் ஒரு பிரச்சினையை அடையாளம் கண்டு, அதற்கு ஒரு புதிய, பயனுள்ள தீர்வை உருவாக்குவதுதான் ஒரு ஸ்டார்ட்அப்.

முதலில், உங்கள் முன்னால் இருக்கக்கூடிய மிகப்பெரிய சவால் என்னவென்றால், எல்லோரும் பேசத் தொடங்குவதற்கு முன்பாகவே, அது என்ன பிரச்சினை என்பதை அடையாளம் கண்டு, அதற்கான ஒரு தீர்வுடன் வருவதுதான். அதுதான் உங்களுக்கு முதலில் இருக்கக்கூடிய மிகப்பெரிய சவால் என்று நான் நினைக்கிறேன். மேலும், உங்களில் பெரும்பாலானவர்கள் அதை ஏற்கனவே செய்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

LinkedInன் இணை நிறுவுநரான ரீட் ஹாஃப்மேன் ஒரு இடத்தில் இப்படிச் சொல்கிறார்: ஸ்டார்ட்அப் என்பது ஒரு உயரமான இடத்திலிருந்து கீழே குதிப்பது போன்றது. கீழே விழுந்துகொண்டிருக்கும்போதே, ஒரு விமானத்தின் பாகங்களை ஒன்றாகச் சேர்த்து அந்த விமானத்தை உருவாக்க முயற்சிப்பது போன்றதுதான் ஸ்டார்ட்அப்.

**துணிந்து முதல் அடியை எடுத்து வையுங்கள்!**

ஸ்டார்ட்அப்கள் என்பவை இப்படித்தான், நீங்கள் களத்தில் இறங்க வேண்டும்; துணிந்து முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் உருவாக்கிய தீர்வு குறித்து உங்களுக்கே கொஞ்சம் தயக்கமோ, இது இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருந்திருக்கலாம் என்ற எண்ணமோ இல்லையென்றால், நீங்கள் ஏற்கனவே கொஞ்சம் தாமதமாகிவிட்டீர்கள்.

ஸ்டார்ட்அப் என்றால், எல்லாவற்றையும் முழுமையாகத் தயாரித்துவிட்டு தொடங்குவது அல்ல. பிரச்சினையை முதலில் அடையாளம் கண்டு, அதற்கான தீர்வை உருவாக்கி, அதை நடைமுறையில் கொண்டு வந்து, அதன் வழியில் தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டே செல்வது தான் ஸ்டார்ட்அப்.

மற்றவர்கள் யோசிப்பதற்கு முன்பே, நீங்கள் ஒரு வாய்ப்பை அடையாளம் கண்டு, அதற்கான தீர்வை ஆராய்ந்து, அதைப்பற்றி யாருமே பேசாத ஒரு விஷயமாக இருந்தாலும், நான் இதைப் பற்றி பேசலாமா? இதை எடுத்துக் கொண்டு போகலாமா? என்றெல்லாம் யோசிக்காமல், இதற்கு நான் ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பேன் என்று தீர்வைக் கொண்டு வருவதுதான் இன்று ஸ்டார்ட்அப்களுக்கு மிக முக்கியமான ஒரு தேவையாக இருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றி ஜோசப் பேசும்பொழுது குறிப்பிட்டார். நாங்கள் தூத்துக்குடியில் புத்தொழில் களம் என்று தொடங்கியபோது, சமூகப் பொறுப்புடன் செயல்படும் ஸ்டார்ட்அப்களைத் தேடிக்கொண்டிருந்தோம். அதில்தான், அவரும், அதில் வெற்றி பெற்ற இன்னொரு சகோதரியும் இங்கே இருக்கிறார்கள். இந்த இருவரும் புத்தொழில் களம் நிகழ்ச்சியில் பரிசு பெற்று இங்கே இருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

**வெற்றிக்கான அடிப்படைக் காரணம்!**

அவர்கள் இருவரும், உலகம் இதுவரை அடையாளம் காணாத அல்லது அதைப் பற்றி கவலைப்படாமல் இருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை உருவாக்கி வந்தார்கள். எனவே,அவர்களுடைய வெற்றிக்கான அடிப்படைக் காரணமும் அதுதான் என்று நான் நினைக்கிறேன். எனவே, நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். உங்களைச் சுற்றியுள்ள விஷயங்களைப் பற்றி சிந்திக்க முயற்சி செய்யுங்கள், சிந்தியுங்கள். செயற்கை நுண்ணறிவால் (AI) ,அரசாங்கத்தால் தீர்க்க முடியாத சூழ்நிலை உள்ளது. மிகப்பெரிய நிறுவனங்கள்கூட அவற்றைப் பற்றி சிந்திப்பதற்குக்கூட நேரம் ஒதுக்க முடியாத பல விஷயங்கள் இருக்கின்றன.

ஸ்டார்ட்அப்பின் மிகச்சிறந்த விஷயங்களில் ஒன்று என்னவென்றால், சிறிய குழுவைச் சேர்ந்த மக்களின் தேவையைக் கூட கவனித்து, அவர்களுக்கான தீர்வை உருவாக்க முடியும். ஆனால், மிகப்பெரிய நிறுவனங்களால் அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால், ஒரு சிறிய எண்ணிக்கையிலான மக்களுக்காக மட்டும் செயல்படுவது அவர்களுக்கு நடைமுறையில் சாத்தியமில்லை. அதனால், யாருக்கு அந்தத் தேவை இருக்கிறது என்பதை நீங்கள் அடையாளம் கண்டு, அவர்களை நேரடியாக அணுகி, அவர்களுக்குத் தேவையான தீர்வை உங்களால் வழங்க முடியும். மிகப்பெரிய நிறுவனங்கள் அந்த மக்களைப் பற்றி கவனம் செலுத்தாமல் இருக்கலாம்.

நீங்கள் பேசிய எல்லாரும் சொன்னது போல, எங்களால் முடியும் என்கிற நம்பிக்கையும், நான் ஒருபோதும் கைவிட மாட்டேன், என்னை யாராலும் கைவிடச் செய்ய முடியாது என்கிற மனப்பான்மையும் மட்டும் தான் உங்களுடைய மனதில் எப்பொழுதும் இருக்க வேண்டிய ஒன்றாகும். அந்த நம்பிக்கையையும், மனப்பான்மையையும் நீங்கள் சுமந்து, அதை முன்னெடுத்துச் சென்றீர்கள் என்றால், நிச்சயமாக வெற்றி மட்டும்தான் உங்களோடு வரக்கூடிய ஒன்றாக இருக்கும்.

அதே நேரத்தில், குமரவேல் பேசும்போது, அறம் செய்ய விரும்பு என்பதிலிருந்து பொருள் செய்ய விரும்பு என்று ஔவையார் சொல்லியிருப்பதாகச் சொன்னார். நான் சொல்கிறேன், அவர்களுக்கு வேண்டுமானால் பொருள் செய்ய விரும்பு என்பதாக இருக்கட்டும்; இங்கே மேடையில் இருப்பவர்கள் எல்லாம் "அறம் செய்துகொண்டே இருக்கட்டும். ஏனென்றால், அதனுடைய ஒரு பகுதிதான், புதியவர்கள் இங்கே நிறுவனங்களுக்கு வர வேண்டும்,சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு,நம்முடைய சேம்பர் ஆஃப் காமர்ஸ் இதை முன்னெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னேறிச் செல்லுங்கள். உலகை வெல்லுங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.


## 93 நாட்களாகியும் கேள்விகளுக்கு பதிலில்லை! த.வெ.க. அமைச்சர்களுடைய மெத்தனப் போக்கால்

# மக்கள் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன!

## சட்டப்பேரவையில் – எஸ்.ஆஸ்டின் குற்றச்சாட்டு!

**சென்னை, ஆக. 22-**

**"மக்கள் பிரச்சினைகளை வினாப்பட்டியலில் சேர்த்து, எழுப்பப்பட்ட வினாக்களுக்கு 93 நாட்களாகியும் எந்தப் பதிலும் வரவில்லை" என்றும் "த.வெ.க. அமைச்சர்களுடைய மெத்தனப்போக்கால் மக்கள் பிரச்சினை பின்னுக்குத் தள்ளப் படுகிறது என்றும் சட்டப் பேரவையில் நாகர்கோயில் எஸ்.ஆஸ்டின் குற்றச் சாட்டை எழுப்பினார்.**



அவரது உரை வருமாறு:-

**எஸ். ஆஸ்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப் பேற்று இன்றுடன் 103 நாட்கள் ஆகிவிட்டன. சுமார் 227 தொகுதிகளைச் சார்ந்த நம்முடைய உறுப் பினர்களெல்லாம் அந்தந் தத் தொகுதி மக்களுடைய அடிப்படைத் தேவைகளை, பிரச்சினைகளை அவையில் வினாக்கள் மூலமாக எழுப் புவதற்காக வினாக்கள் கொடுக்கப்பட்டு சுமார் 93 நாட்கள் ஆகிவிட்டன. வினாக்கள்விடைகள் நேரத்தின் அவசியம் குறித்து பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். நம்முடைய பேரவை விதி 45ன்படி, உறுப்பினர்கள் பேரவைக்கு கொடுத்த வினாக்கள் 15 நாட்களுக்குள்ளாக அனுமதிக்கப் பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அவை அனுப் பப்பட வேண்டும்.

அவ்வாறு அனுமதிக்கப் பட்டு, அனுப்பப்பட்ட துறைகளிலிருந்து அந்தத் துறை அதிகாரிகள்மூலமாக அல்லது அமைச்சர்கள் மூலமாக 42 நாட்களுக்குள்ளாக பேரவைக்கு வர வேண்டும்.

பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்து, 42 நாட்களுக்குள்ளாக இது வினாப் பட்டியலில் சேர்க் கப்பட வேண்டும். ஒரு வேளை துறை அதிகாரிகள் காலதாமதமாக கொடுப்ப தற்கு காரணம் உங்களிடம் வந்து கேட்டால் அதற்காக இன்னும் 14 நாட்கள் அதாவது இரண்டு வார காலம் கால அவகாசம் கொடுக்கலாம். அந்தக் கால அவகாசத்திற்குப் பிறகும் அந்தப் பதில் வரவில்லை என்று சொன்னால், நீங்கள் அதை வினாப் பட்டியலில் சேர்த்து, இந்த அவையிலே உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்புவதற்கான அனுமதியை வழங்க வேண்டும். அதைத்தான் விதி 45 சொல்கிறது. ஆனால், இன்றைக்கு 93 நாட்கள் ஆகிவிட்டன. இதுவரைக்கும் அந்தக் கேள்விகளுக்கான பதில்கள் வரவில்லை என்று நீங்களும் இரண்டு முறை இங்கு பதிவு செய்துவிட்டீர்கள்.

எனவே, அமைச்சர்களுடைய, அதிகாரிகளுடைய மெத்தனப்போக்கால் இன்றைக்கு மக்களுடைய பிரச்சினை பின்னுக்குத் தள்ளப் படுகின்றது.

234 தொகுதிகளிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேள்விகள் பேரவைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்றைக்கு அவையில் எடுக்கப் படவில்லை. இன்னும் 8 நாட்கள்தான் அவை இருக்கிறது.

இப்போது பத்து, பத்து கேள்வி எடுத்தாலும் 80 கேள்விதான் உங்களால் எடுக்கமுடியும்.

எனவே, யார் இதைக் காலதாமதமாக அனுப்பியிருக்கிறார்கள் அல்லது குறிப்பிட்ட காலவரையறைக்குள் யார் அனுப்பவில்லையோ அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு notice அனுப்பி, விளக்கம் கேட்டு, அந்த விளக்கம் திருப்தியளிக்கவில்லை என்று சொன்னால், எங்களுக்குச் சொல்லுங்கள். நாங்கள் உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கிறோம்.

இது இந்த பேரவையினுடைய விதியை மீறக்கூடியதாகும். உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அதை அனுப்ப வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு எஸ். ஆஸ்டின் பேசினார்.



கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பாளையங்கோட்டை மத்திய சிறையில் உள்ள சிறைவாசிகளுக்கு புத்தகங்கள் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அந்தக் கோரிக்கையின் படி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 3000 புத்தகங்களை வழங்கினார். அதனை பாளையங்கோட்டை சிறை நிர்வாகத்திடம் நேற்று (21.08.2026) மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் ஒப்படைத்தார். உடன் கழக நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், தமயந்தி, தமிழ்ச்செல்வன், ரவிச்சந்திரன், செல்வ சூடாமணி, பிரேம் ஆனந்த்,ஷேக் முஜிபூர் ரகுமான், பழனி ஆகியோர் உள்ளனர்.